சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 19.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **100/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-21 |
| சாட்சியின் பெயர் | : | சுப்பிரணியன் |
| தந்தை பெயர் | : | சிவப்பிரகாசம் |
| கிராமம் | : | கண்கொடுத்தவணிதம் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | முதல்நிலை காவலர்,<br>நகர காவல் நிலையம்,<br>திருவாரூர். |
| வயது | : | 34 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 10 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் நகர காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து

வருகிறேன். கடந்த 2020 ஆம் ஆண்டு திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்தபோது கடந்த 14.11.2021ம் தேதியன்று திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் குற்ற எண் 873/2021 இல் ச/பி. 341, 324, 506 (2), 302 இதச என்ற வழக்கில் முதல் தகவல் அறிக்கையினை விரைவு தபாலாக 14.11.2021ம் தேதி இரவு 11.00 மணிக்கு திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்திலிருந்து திருவாரூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு விரைவு தபாலாக எடுத்து சென்றேன். அன்றைய தினம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள், பொறுப்பாக திருத்துறைப்பூண்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களிடம் 15.11.2021ம் தேதி நள்ளிரவு 01.30 மணிக்கு அவர்கள் வீட்டிற்கு சென்று முதல் தகவல் அறிக்கையை அளித்து உத்தரவு பெற்று நிலையம் வந்தேன். இதன் சம்மந்தமாக திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

தினமும் எங்கள் காவல் நிலையத்தில் என்னுடைய வருகையை பதிவு செய்வதற்காக வருகை பதிவேட்டில் பதிவு செய்வது வழக்கமா என்றால் சரிதான்.கடந்த 14.11.2021ம் தேதியன்று என்னுடைய வருகை பதிவேட்டினை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. காவல் துணை கண்காணிப்பாளர் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன தேதியில் நான் முதல் தகவல் அறிக்கையை கொண்டு செல்லவும் இல்லை

என்றாலும் எனது மேலதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.19 16:49:44 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.